00543

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

இறுதிப்பரீட்சை

மட்டம் - 04

EPU4531–கற்றல் கற்பித்தலில் முன்னோக்கு

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 20.06.2025 நேரம்:மு.ப 09.30 - பி.ப 12.30

---

**பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.**

## பகுதி – I

1. 1997 இல் அறிமுகப்படுத்தப்பட்ட தேர்ச்சி அடிப்படையிலான கலைத்திட்டத்தின் கருத்தினைச் சுருக்கமாக விளக்குக.
2. ஆரம்பப் பாடசாலைப் பிள்ளைகளுக்கான புதுமுகத் தேர்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்கான **இரண்டு (02)** நோக்கங்களைச் சுருக்கமாக விளக்குக.
3. 1997 இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்பக் கல்வி மறுசீரமைப்பில் காணப்படும் மகாத்மா காந்தியின் தத்துவார்த்தக் கருத்துக்களின் செல்வாக்கைச் சுருக்கமாக விபரிக்குக.
4. விளைதிறன் மிக்க கற்றல் சூழலைப் பராமரிப்பதற்காக பக்லர் (Buckler) கேஸில் (Castle) (2014) ஆகியோர் அறிமுகப்படுத்திய **ஐந்து (05)** தரநிலைகளைக் குறிப்பிடுக.
5. ஆசிரியர்கள் யூரி பிரான்.'.பென்பிரென்னரின் (Uri Bronfenbrenner) பேரளவு முறைமை (Macrosystem) கூறுகளை வகுப்பறைகளில் எவ்வாறு இணைக்க முடியும் என்பதைச் சுருக்கமாக விளக்குக.
6. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் கற்பித்தற் துணைச்சாதனங்கள் ஏன் முக்கியம் வாய்ந்தவை என்பதற்கான **ஐந்து (05)** காரணங்களைக் குறிப்பிடுக.
7. கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டிற்கு இடையிலான வேறுபாடுகள் யாவை?
8. டேலின் அனுபவக் கூம்பு (Dale's cone) என்ற எண்ணக்கருவை விளக்குக.

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9. i. பெஸ்டரலோஜியின் (Pestalozzi) கல்வி அணுகுமுறையின் முக்கிய கொள்கைகளில் ஒன்று: "பயத்தை அல்ல, அன்பை அடிப்படையாகக் கொண்ட அதிகாரம் - ஆசிரியர்கள் மாணவர்களை தண்டனை அல்லது மிரட்டல் மூலம் அல்லாமல், கவனிப்பு, மரியாதை மற்றும் புரிதல் மூலம் வழிநடத்தி முகாமைசெய்ய வேண்டும்." இக்கூற்றுடன் நீங்கள் உடன்படுகின்றீர்களா? உங்கள் விடையை ஆதரிப்பதற்கான காரணங்களைத் தருக.

   (10 புள்ளிகள்)

   ii. இன்றைய ஆரம்ப வகுப்பறைகளில் இக் கொள்கை எந்த அளவிற்கு பிரதிபலிக்கிறது என்பதை பகுப்பாய்வு செய்க.

   (10 புள்ளிகள்)

10. i. இறுதிக் கணிப்பீடு மற்றும் இடைநிலைக் கணிப்பீட்டை ஒப்பிட்டு, பொருத்தமான உதாரணங்களை வழங்குக.

(04 புள்ளிகள்)

ii. கணிப்பீட்டின் போது விளைதிறன்மிக்க வினாக்களைக் கேட்க ஆசிரியர் பின்பற்ற வேண்டிய **நான்கு (04)** நுட்பங்களைப் பற்றி கலந்துரையாடுக.

(06 புள்ளிகள்)

iii. மாணவர்களின் முன்னேற்றத்தை கணிப்பிடும் போது ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் **இரண்டு (02)** பிரச்சினைகள் / சவால்களைக் குறிப்பிட்டு, அவற்றைச் சமாளிக்க அல்லது குறைப்பதற்கான வழிவகைகளைப் பரிந்துரைக்க.

(10 புள்ளிகள்)

11. i. "கல்வியின முதற் படி, பிள்ளைகள் தாங்களாகவே விடயங்களைச் செய்வதன் மூலம் மகிழ்ச்சியை அனுபவிக்க அனுமதிப்பதாகும்."

பிள்ளைகளில் தற்சார்பை (Self – Reliance) விருத்தி செய்வதற்கான மரியா மொண்டிசோரியின் அணுகுமுறை தொடர்பாக மேற்குறித்த கூற்றைப் பற்றிக் கலந்துரையாடுக.

(10 புள்ளிகள்)

ii. சிறுவர் நேயக் கற்றல் சூழலைத் தயார்செய்வதில் ஆசிரியரின் வகிபங்கை மதிப்பிடுக.

(10 புள்ளிகள்)

12. i. "அகர்வால் மற்றும் குப்தா (2007), ஆகியோர் ஆசிரியர்கள் விளைதிறனுள்ள கற்பித்தல் துணைச்சாதனங்களை வடிவமைக்கும் போது அல்லது தேர்ந்தெடுக்கும் போது அவற்றின் அம்சங்களைப் பற்றி அறிந்திருப்பது முக்கியம் என்பதை வலியுறுத்துகின்றனர்."

கற்றல் துணைச்சாதனங்களைத் தேர்ந்தெடுத்துத் தயாரிக்கும் போது கருத்திற் கொள்ள வேண்டிய முக்கியமான **ஐந்து (05)** காரணிகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. "செயலற்ற கற்றலை (Passive Learning) விடச் செய்வதன் மூலம் (Learning by doing) கற்றல் சிறந்த ஞாபகத்திற்கு வழிவகுக்கிறது." டேலின் அனுபவக் கூம்பைப் பயன்படுத்தி இக்கூற்றை நியாயப்படுத்துக. ஆரம்ப வகுப்பில் உள்ள கருப்பொருளுக்குப் பொருத்தமான கற்பித்தற் துணைச்சாதனங்களுக்கான உதாரணங்களை வழங்குக.

(10 புள்ளிகள்)

13. i. விகொட்ஸ்கியின் சமூக கலாசார கற்றற் கோட்பாட்டின் முக்கிய அம்சங்களை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

ii. உதவிகரமான ஆரம்ப வகுப்பறைச் சூழலை உருவாக்க இக் கோட்பாட்டை எவ்வாறு பயன்படுத்தலாம்? உதாரணங்களை வழங்குவதன் மூலம் விளக்குக.

(10 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமையுடையது -



76